பதிவு எண்: 1 0 3 0 1

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

வகுப்பு : 10 தமிழ் மதிப்பெண்கள் : 50
நேரம் : 1.30 மணி

## பகுதி - 1

**(I). சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. வேர்கடலை, மிளகாய் விதை மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை

2. எந்ததமிழ் நா என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

3. பாடு இமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்றும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. பெரிய மீசை சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புச்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத் தொகை

**(II). பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** 3x1=3

நடுங்கு சுவல் அசைத்தகையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர
கின்னே வருகுவர் தாயர் என்போர்
நன்னர் நன்மொழி கேட்டனம்

6. இப்பாடல் அடிகள் இடம்பெறும் நூல் எது? அ) மலைப்படுகடாம்
ஆ) முல்லைப்பாட்டு இ) பாவியத்கொத்து ஈ) தனிப்பாடல்திரட்டு

7. இப்பாடலை இயற்றிவயர் யார்?
அ) நம்பூதனார் ஆ) தமிழழகனார் இ) பாரதியார் ஈ) குடபுலவியனார்

8. இப்பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) இன்னே, நன்னர் ஆ) கோவலர், தாயர்
இ) கொடுங்கோல், கோவலர் ஈ) கையள் என்போர்

## பகுதி - 2

### பிரிவு - 1

**(III). எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4x2=8

9. வசன கவிதை குறிப்பு வரைக?
10. விருந்தினரை மகிழ்வித்துக்கூறும் முகமன் சொற்களை எழுதுக?
11. "இறடிபொம்மல் பெறுகுவீர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக?
12. வேங்கை என்பதை தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும். வேறுபடுத்திக் காட்டுக? .
13. விடும் என முடியும் குறளை எழுதுக?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு - 2

**(IV). எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8**

14. விடைகளுக்கு ஏற்ற வினாத்தொடர் அமைத்து எழுதுக.
 அ) பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்படுபவர் பாரதியார்.
 ஆ) காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிறநூல் காசிக்காண்டம்
15. கலைச்சொற்கள் தருக. - அ) storm ஆ) conversation
16. அகராதியில் காண்க - அ) அகன்சுடர் ஆ) ஆர்கலி
17. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக - மலை - மாலை
18. பழமொழிகளை நிறைவு செய்க.
 அ) அளவுக்கு .......... ஆ) உப்பிட்டவரை ..........

## பகுதி - 3

**(V). எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x3=9**

19. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும்பாங்கினை எழுதுக?
20. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது - இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
21. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
22. அன்னை எனத் தொடங்கி பேரரசே! வரை அன்னை மொழியே பாடலை எழுதுக.

## பகுதி - 4

**(VI). எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x5=10**

23. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்'. எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
24. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



## பகுதி - 5

**கட்டுரைவடிவில் விரிவான விடையளிக்கவும். 1x7=7**

25. அ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)
 ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

---



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com